# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2354/06 - 2023 ඔක්තෝබර් මස 16 වැනි සඳුදා - 2023.10.16

*2354/06 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு சனாதிபதி**
**ரணில் விக்கிரமசிங்க அவர்களினால்**

(முத்திரை)

**ரணில் விக்கிரமசிங்க**

1. ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்கள்
2. சுந்தரம் அருமைநாயகம் அவர்கள்
3. சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே அவர்கள்
4. சனாதிபதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர அவர்கள்
5. ரஜித நவீன் கிரிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா அவர்கள்
6. அஹமட் லெப்பே மொஹமட் சலிம் அவர்கள்
7. சாகரிகா தெல்கொட அவர்கள்
8. எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து அவர்கள்
9. விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

1978 ஆம் ஆண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இந்த நாட்டு தேர்தல் முறைமை மற்றும் தேர்தல்களை நடாத்தும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தி புதிய சட்டங்கள்


1A - G 40541 — 11 (2023/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அறிமுகப்படுத்தப்பட்டதுடன், நல்லாட்சிக் கோட்பாடுகளுக்கு அமைவாக மற்றும் பிரதிநிதித்துவ சனநாயகத்தை பலப்படுத்தி சமூகத்தின் நடைமுறைத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் குறித்த தேர்தல் சட்டங்கள் மேலும் திருத்தப்பட வேண்டிய தேவைப்பாடு உருவாகியுள்ளதனாலும்;

மேலும், அரசியல் கட்சிகள், சுயாதீன குழுக்கள் மற்றும் அவற்றின் அங்கத்தவர்கள் சில சந்தர்ப்பங்களில் தமது அரசியல் மற்றும் பொதுப் பணிகளின் போது நடந்துகொள்ளும் விதம் மற்றும் ஊடகப் பாவனை சிறந்த முறையில் மேற்கொள்ளப்படாத ஒரு போக்கினைக் காணக்கூடியதாக உள்ளதால் அவர்களுக்கான ஒழுக்க நெறிமுறையினை அறிமுகப்படுத்தல், ஊடகப் பாவனை தொடர்பான வழிகாட்டல்களைத் தயாரித்தல் ஆகிய தேவைப்பாடுகள் உள்ளதனாலும்;

மேலும், உண்மையான தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்து அவற்றை நிதி ரீதியான மற்றும் வேறு முறையற்ற நோக்கங்களுக்காக பிற தரப்பினர்களிடம் ஒப்படைத்தல் மற்றும் அரசியல் கட்சிகளின் ஒருசில செயற்பாடுகள் காரணமாக அக்கட்சிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழக்கச்செய்யப்பட்டுள்ளதனால், நம்பகத்தன்மையினையும் பொறுப்புக்கூறலையும் ஏற்படுத்துவதற்காக அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான சட்டவரையறையினை பலப்படுத்த வேண்டியுள்ளதனாலும்;

மேலும், இங்கு இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்தல், விசாரித்தல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பது அவசியம் என நான் கருதுவதனால்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, திருத்திய (393 ஆம் அத்தியாயமான) 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட,

1. ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்கள்
2. சுந்தரம் அருமைநாயகம் அவர்கள்
3. சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே அவர்கள்
4. சனாதிபதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர அவர்கள்
5. ரஜித நவீன் கிறிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா அவர்கள்
6. அஹமட் லெப்பே மொஹமட் சலிம் அவர்கள்
7. சாகரிகா தெல்கொட அவர்கள்
8. எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து அவர்கள்
9. விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ அவர்கள்

ஆகிய உங்கள் அனைவரையும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகவல் பெற்றுக்கொள்ளல், ஆய்வு மற்றும் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் என்னவெனில்;

01. நடைமுறையில் உள்ள அனைத்து தேர்தல் சட்டங்கள் தொடர்பாகவும் பரிசோதித்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி நடைமுறைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையவாறு தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

    i. பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.
    ii. தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து குறித்த தேர்தலை நடாத்தி முடிவுகள் வெளியிடப்படும் திகதி வரையான கால அளவினை குறைத்தல்.
    iii. வாக்களிக்கும் போது அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் வாக்களிப்புக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
    iv. வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    v. ஒரே நபருக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான 02 தேர்தல்களில் போட்டியிடுவதற்கும், மற்றும் தெரிவுசெய்யப்படுமிடத்து ஒரே தடவையில் ஏற்புடைய இரு சபைகளையும் பிரதிநிதித்துவம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல். (உதா: பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள நபர் ஒருவருக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி அதிலும் தெரிவுசெய்யப்படுமிடத்து ஒரே தடவையில் இரண்டு சபைகளையும் பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்).

vi. தேர்தல் தினத்தன்று தேர்தல் பணிகளுக்கான சேவைகளை வழங்கும் அரச துறையில் கடமை புரியாத வாக்காளர்களுக்கும் தபால்மூலம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

vii. மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்தல் தொடர்பில் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது பல்சமூக தன்மையினையும் கவனத்திற்கொண்டு பல்சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தனிஉறுப்பினர் முறை கலக்கப்பட்ட பொருத்தமான முறை ஒன்றை தயாரித்தல்.

02. அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களால் ஊடகங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய விதம் பற்றிய ஊடக வழிகாட்டல்களைத் தயாரித்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

03. அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அவற்றின் அங்கத்தவர்கள் அரசியல் மற்றும் பொதுப் பணிகளை நிறைவேற்றும் போது நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய ஒழுக்க நெறிமுறையை அறிமுகப்படுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

04. அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் மற்றும் நம்பகத் தன்மையுடனும் மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையிலும் அவை நடவடிக்கை மேற்கொள்ளல் பற்றிய சட்டங்களைப் பலப்படுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

மேலும், மேலே சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர், சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெராட் டெப் அவர்கள் ஆகிய உங்களை நான் இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தங்களுக்குத் தெரிகின்றவாறு தேவையான விசாரணைகள் மற்றும் சகல புலனாய்வுகளை நடாத்துவதற்கு மேற்சொல்லப்பட்ட ஆணையாளர்கள் ஆகிய உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, இவ்வதிகாரத்தை வழங்குவதன்மூலம் ஆறு (06) மாத காலத்திற்குள் தங்களது விசாரணைகள் மற்றும் புலனாய்வுத் தேடல்கள் மற்றும் அதுகுறித்த தங்களது பரிந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை எனக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன்.

மேலும் உங்களின் ஆய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் ஒத்துழைப்பு அல்லது தகவல் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள், மற்றும் வேறு நபர்களினால் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்துமூன்றாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் பதினைந்தாம் திகதி கொழும்பில் வழங்கப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 10 - 0177

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.